# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்
# Provincial Department of Education, Northern Province

## மூன்றாம் தவணைப் பரீட்சை – 2022 – (2023)

| | | |
|---|---|---|
| **தரம் - 10** | **நாடகமும் அரங்கியலும்** | **நேரம்: 3.00 மணித்தியாலங்கள்** |

**பெயர் / சுட்டெண் ..................................................................................**

**மேலதிக வாசிப்பு நேரம் : 10 நிமிடம்**

**கவனிக்க:**

- **எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.**
- **1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4), என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**
- **உங்களுக்கு வழங்கப்பட்ட விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (X) இடுக.**

**பகுதி - I**

(1) நாடகத்தில் பயன்படும் காண்பிய மூலகம் அல்லாதது
1. இசை 2. ஒளி 3. வேடவுடை 4. ஒப்பனை

(2) நாடகம் எவ்வகையான கலை?
1. ஆற்றுகைக்கலை 2. விம்பக்கலை 3. வாசிப்புக்கலை 4. செவிப்புலக்கலை

(3) நாடகத்தின் மிகப் பிரதான மூலகமாக அமைய மாட்டாது?
1. அரங்கவெளி 2. பார்ப்போர் 3. நடிகன் 4. ஒளி

(4) நாடக எழுத்துருவினை எழுதுபவர்,
1. நடிகன் 2. தயாரிப்பாளர் 3. நெறியாளர் 4. நாடகாசிரியர்

(5) ஆரொடு நோகேன் நாடகத்தில் கொண்டாடப்படுவது,
1. பிறந்தநாள் 2. திருமணநாள் 3. பரிசளிப்பு விழா 4. புதுமனை விழா

(6) யதார்த்தப்பண்பு கொண்ட அசைவு,
1. முதியவரின் அசைவு 2. காவடி
3. அரங்கில் யானையின் அசைவு 4. களப்பயிற்சியில் பறவையின் அசைவு

(7) வானொலி நாடகம் தொடர்பான கூற்று எது?
1. கால,வெளிக் கலை 2. தாக்கமறுதாக்கமுடைய கலை
3. கணப்பிரசன்னமாகும் கலை 4. காலம் கடந்தும் வாழும் கலை

(8) நீண்ட வசனங்களைப் பேச எந்த பகுதியின் தசைநார்களைக் கட்டுப்படுத்த நடிகன் பயிற்சி பெற வேண்டும்?
1. அடிவயிறு 2. நெஞ்சு 3. தொண்டை 4. முதுகு

(9) சிறுகதைகளில் காட்சிகள் அமைந்திருக்கும் விதம்
1. ஆடல் 2. சொற்படிமம் 3. பாடல் 4. பாத்திரம்



kalvi.lk

(10) நடிகர் வெவ்வேறு பாத்திரங்களை ஏற்க உதவுவது?
1. பயிற்சி 2. ஆர்வம் 3. ஏற்றுக்கொள்ளும் தன்மை 4. குழுமஉணர்வு

(11) ஊமத்துடன் தொடர்புடைய அரங்க விளையாட்டாக அமைவது,
1. குருட்டாட்டோ 2. ஆடும் வீடும் 3. பழக்கலவை 4 நண்டு, இறால்,மீன்

(12) ஈழத்து நாட்டார் ஆற்றுகை கலைவடிவம்,
1. பலே 2. காவடி 3. ஒபேறா 4. பரதநாட்டியம்

(13) காத்தவராஜன் கூத்தின் கதாநாயகி,
1. மாரிஅம்மன் 2. ஆரியப்பூமாலை 3. ரதி 4. வல்லத்துமங்காளி

(14) அண்ணாவியார் நாடகமரபு அழைக்கப்படுவது?
1. இசைநாடகம் 2. கூத்து 3. வசந்தன் கூத்து 4. தெருக்கூத்து

(15) ஆரொடுநோகேன் நாடகமானது முதன்முதலாக மேடையேற்றப்பட்ட அரங்கு எது?
1. மானிப்பாய் இந்துக் கல்லூரி அரங்கு 2. மகாஜனக்கல்லூரி அரங்கு
3. சுண்டிக்குளிமகளீர்கல்லூரி அரங்கு 4. வேம்படிமகளீர்கல்லூரி அரங்கு

(16) படச்சட்டமேடைப் பரப்பொன்றின் பகுதிகளை பொதுவாக எத்தனை பகுதிகளாகப் பிரிப்பர்?
1. 3 2. 6 3. 8 4. 9

(17) குளுர்த்திச் சடங்கானது எம்மாதத்தில் கொண்டாடப்படுகின்றது?
1. பங்குனி 2. சித்திரை 3. வைகாசி 4. ஆவணி

(18) பாண்டவர் வனவாசச் சடங்குடன் தொடர்புடைய அம்மன்,
1. மாரிஅம்மன் 2.கண்ணகி அம்மன் 3. காளி அம்மன் 4. திரௌபதிஅம்மன்

(19) திருமறைக்கலாமன்றத்தினரால் வெளியிடப்படும் நாடக சஞ்சிகை
1. ஆற்றுகை 2. கட்டியம் 3. உடல் 4. அரங்கு

(20) கூத்து என்றவுடன் மனதில் வருவது,
1. பாட்டு 2. இசை 3. மேடை 4. ஆட்டம்

(21) ஊமச்சித்திரிப்பில் பிரதானமாவது?
1. உடல் 2. குரல் 3. வேடஉடை 4. உளம்

(22) ஆள்மேற்கொள்பவர்?
1. நடிகன் 2. நெறியாளன் 3. நாடகாசிரியர் 4. இசைஞர்

(23) கூத்தில் சபையோர் எனப்படுவோர்,
1. பார்வையாளர் 2. ஒப்பனையாளர்
3. நடிகரை 4. தாளம் இசைப்பவர், பிற்பாட்டுப் பாடுபவர்களை

(24) நாடக எழுத்துருவில் மறைந்து நிற்பது?
1. கரு 2. கதை 3. பாத்திரம் 4. மோதுகை

(25) நாடக ஆற்றுகையின்போது காணப்படுவது?
1. ஆர்வம் 2. வெட்கம் 3. பயிற்சி 4. குழு உணர்வு


kalvi.lk

(26) ஈழத்து இசை நாடக வரலாறு எனும் நூலை எழுதியவர்,
1. பேராசிரியர் சி.மௌனகுரு
2. பேராசிரியர் சு.வித்தியானந்தன்
3. கலாநிதிகாரை. சுந்தரம்பிள்ளை
4. குழந்தை ம. சண்முகலிங்கம்

(27) நாடகமொன்றின் கடைசி ஒத்திகை எவ்வாறு அழைக்கப்படும்?
1. வெள்ளுடுப்பு ஒத்திகை
3. ஒத்திகை
2. வாசிப்பு ஒத்திகை
4. தொழில்நுட்ப ஒத்திகை

(28) இசைநாடகத்தின் தந்தை எனப் போற்றப்படுபவர் யார்?
1. பம்மல் சம்மந்தமுதலியார்
2. சங்கரதாஸ் சுவாமிகள்
3. நவாப் இராஜமாணிக்கம்
4. கண்ணப்பதம்பிரான்

(29) பாத்திரமொன்றின் பௌதீகப் பண்பாகக் கொள்ளத்தக்கது,
1. பால் 2. தொழில் 3. அந்தஸ்து 4. சமயம்

(30) மேடைப் பரப்பொன்றிலே அதிமுக்கியத்துவம் வகிக்கும் பகுதியாக அமைவது,
1.UR 2. UC 3. DC 4. UL

(31) தானாயம்பொல எனும் அரங்கவெளியில் இடம் பெறும் ஆற்றுகைவடிவம்
1. தொவில் 2. கோலம் 3. சொக்கரி 4. நூர்த்தி

(32) சொக்கரி ஆற்றுகையுடன் தொடர்பற்ற பாத்திரம்,
1. குருகாமி 2. காமாட்சி 3. வைத்தியர் 4. பச்சிமீரா

(33) கதவு அடித்துப் பாடுதலுடன் தொடர்புடைய சடங்கு,
1.குளுர்த்தி 2. வேட்டைத் திருவிழா 3. சூரன்போர் 4. பாஸ்கு

(34) வட்டக்களரியில் நிகழ்த்தப்படுவது?
1. வடமோடி 2. மகிடிக்கூத்து 3. காமன் கூத்து 4. அருச்சுனன் தபசு


(35) வசந்தகானசபாவினைத் தோற்றுவித்தவர்,
1. பம்பல் சம்பந்தமுதலியார்
3. காரைசுந்தரம்பிள்ளை
2. கலையரசு சொர்ணலிங்கம்
4. நடிகமணி வி.வி வைரமுத்து

(36) மன்னாரில் ஆடப்படும் கூத்தாக அமைவது,
1. நாட்டை 2. தென்பாங்கு 3. தென்மோடி 4. வடமோடி


(37) உள்ளதை உள்ளபடி கூறும் நாடகமோடி,
1. யதார்த்தமோடி
2. மிகைப்பாட்டுமோடி
3. யதார்த்தவிரோதமோடி
4. குறியீட்டுமோடி

(38) சிறுகதைகளை வாசிக்கும் போது காட்சிப் படிமங்கள் தோன்றும் இடம்,
1. மேடையில் 2. அரங்கவெளியில் 3. கண்களில் 4. மனவெளியில்

(39) அருகிலுள்ள படம் குறித்து நிற்கும் அரங்க ஆளுமை,
1. கலையரசு சொர்ணலிங்கம்
2. பேராசிரியர் சு.வித்தியானந்தன்
3. காரைசுந்தரம்பிள்ளை
4. பேராசிரியர் க.கணபதிப்பிள்ளை



(40) படம் குறித்து நிற்கும் ஆற்றுகை வடிவம்?
1. தெருக்கூத்து 2. மணிப்புரி 3. கதகளி 4. குச்சுப்பிடி



(20x2 = 40 புள்ளிகள்)



kalvi.lk

## பகுதி - II

❖ **முதலாம் வினாவுக்கும் ஏனையவற்றில் எவையேனும் நான்கு வினாக்களுக்குமாக மொத்தமாக ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

01) 1. நீர் அறிந்த சிறுவர் நாடகம் ஒன்று தருக. (01 புள்ளி)
2. ஆடும் வீடும் என்ற அரங்க விளையாட்டின் ஊடாக நடிகர் பெற்றுக்கொள்ளக் கூடிய பயிற்சியாக அமைவது? (01 புள்ளி)
3. இசை நாடகத்திற்கு வழங்கப்படும் மறு பெயர்களில் ஒன்று தருக. (01 புள்ளி)
4. காமன் கூத்தின் பிரதானவாத்தியக் கருவி யாது? (01புள்ளி)
5. புதிதளித்தல் என்றால் என்ன? (01 புள்ளி)
6. கரலிய எனும் அரங்கில் நிகழ்த்தப்படும் ஆற்றுகை எது? (01 புள்ளி)
7. நாடகமொன்று ஆரம்பிப்பதற்கான நேரத்தினை தீர்மானிப்பவர் யார்? (01 புள்ளி)
8. சகல கூத்துக்களிலும் பயன்படுத்தப்படும் அடிப்படையானவாத்தியக் கருவி (01 புள்ளி)
9. ஒளி வகைகள் இரண்டு தருக. (02 புள்ளிகள்)
10. கட்புல - செவிப்புல கலைகள் இரண்டு தருக. (02 புள்ளிகள்)

(02) 1. அரங்கவெளி என்றால் என்ன? (02 புள்ளிகள்)
2. அரங்கவெளியொன்று கொண்டிருக்க வேண்டிய பண்புகளைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)
3. படச்சட்ட மேடை ஒன்றினை வரைந்து அதன் பகுதிகளைக் குறித்துக் காட்டுக. (08 புள்ளிகள்)

(03) 1. நாடகம் என்றால் என்ன என விளக்குக. (04 புள்ளிகள்)
2. நாடகக் கலையின் பிரதான பண்புகள் நான்கினைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)
3. நாடகத்திற்கும் சிறுகதைக்கும் இடையிலான வேறுபாடுகளைக் குறிப்பிடுக. (08 புள்ளிகள்)

(04) பின்வரும் சடங்குகளின் ஆற்றுகை முறை பற்றி விளக்குக.
1. சூரன் போர் (04 புள்ளிகள்)
2. குளுர்த்தி (04 புள்ளிகள்)
3. ரட்டயக்கும (04 புள்ளிகள்)

(05) 1. ஆரோடு நோகேன் நாடகத்தின் கரு, முரண்பாடு, யாது? (04 புள்ளிகள்)
2. ஆரொடுநோகேன் நாடகப் பாத்திரங்களைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)
3. நாடகத்தின் படி இரண்டாவதாகத் தோன்றும் குடும்பத் தலைவரின் பாத்திர இயல்புகளைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(06) 1. கூத்து என்றால் என்ன ? (02 புள்ளிகள்)
2. கூத்து ஆடப்படும் பிரதேசங்களையும் அங்கு ஆடப்படும் கூத்துக்களையும் பட்டியற் படுத்துக. (10 புள்ளிகள்)

(07) 1. இசைநாடகம் என்றால் என்ன? (04 புள்ளிகள்)
2. இசைநாடகத்தின் பண்புகள் நான்கு தருக. (04 புள்ளிகள்)
3. இசைநாடகஆளுமை வி.வி. வைரமுத்து பற்றிக் கருத்துரைக்குக. (04 புள்ளிகள்)



kalvi.lk

# 2025

## 1ம் தவணை வகுப்புகள்

**தரம் 6 முதல் 11 வரையான மாணவர்களிற்கான தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூல வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன.**

**ஆரம்பம் 01.01.2025**

*இலங்கையின் எப்பாகத்திலிருந்தும் Zoom app மூலம் எமது வகுப்புகளில் இணைந்து கொள்ள முடியும்.*

*அனைத்துப் பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ்...*

Education கல்வி අධ්‍යාපන Kalvi.lk

**Whatsapp**
**075 287 1457**